2. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர வர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சனையை இங்கே எழுப்புவதற்கு தங்களுடைய மேலான அனுமதியை வேண்டுகிறேன். பல கோடிக்கணக்கான ரூபாய் சம்பந்தப்பட்ட எரிசாராய ஊழல் சம்பந்தமாக ஆளும் கட்சியினர் (குறுக்கீடுகள்) முதலமைச்சர் இங்கே இருக்கிற காரணத்தால் சொல்கிறேன் எங்களைப் பற்றி வெளியிலே, இந்திரா காங்கிரஸ்காரர்கள்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. இதைக் கொண்டுவர வேறுபல வழிகள் இருக்கின்றன. ஒத்தி வைப்புத் தீர்மானம் மூலம் கொண்டு வரலாம்; கவன ஈர்ப்புத் தீர்மானம் மூலம் கொண்டு வரலாம்; அவை உரிமை மீறல் பிரச்சனையாகக் கொண்டுவரலாம்; ஏற்கெனவை உங்கள் கட்சியின் துணைத் தலைவர் இதுபற்றி, ஓர் அவை உரிமை மீறல் பிரச்சனை கொடுத்திருக்கிறார். அது ஆய்வில் இருக்கிறது.

டாக்டர் கே. சௌரிராஜன் : தலைவரவர்களே, நீங்கள் எந்த அடிப்படையிலே இந்த கவன ஈர்ப்பு, ஒத்தி வைப்புத் தீர்மானங் கள் இந்த அவையில் அனுமதிக்கிறீர்கள் என்று தெரியவில்லை. தீ விபத்து குறித்து நான் ஒரு தீர்மானம் கொடுத்திருந்தேன். அதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உங்களது தீர்மானத்தில்

"The inefficiency of the Fire Service Department in extinguishing the frequent accidents in Spencer buildings ...... என்று சொல்லியிருந்தீர்கள். ஸ்பென்சர் பில்டிங்கில் அடிக்கடி எங்கே தீப்பிடித்திருக்கிறது. இரண்டாவதாக, நீங்கள் Inefficiency of the Fire Service Department என்று சொல்லியிருக்கிறீர்கள். ப்யர் சர்வீஸ் சேவையை எல்லோரும் பாராட்டியிருக்கிறார்கள். நீங்கள் 'இன்னெபிசியன்சி' என்று சொன்னால் எப்படி?

டாக்டர் கே. சௌரிராஜன் : தலைவரவர்களே, ***

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவையெல்லாம் அவைக் குறிப்பிலே வராது.

(*) மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைப்படி நீக்க அகற்றப்பெற்றது.